13.02.2025

O.S.No.271/2016

வா.சா.1.திரு.சுப்பிரமணியம்   த.பெ. ராமநாதன்

சாட்சி இன்று  அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

பிரதிவாதி சொத்தில் வடகிழக்கு மூலையில் அவர்களுக்கு பாத்தியப்பட்ட கடை ஒன்று உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது பிராது பாரா 6 ல் பிரதிவாதிகளுக்கு வண்டியூர் 1 வது பிட் கிராமத்தில் R.S.No. 7/4A1A ல் 52 செண்ட் நிலம் கிரைய பாத்தியம் எனவும் அதில் 11செண்ட் நிலம் தேசிய நெடுஞ்சாலைஅமைப்பதற்காக அரசால் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீதம் 19 ஏர்ஸ் உள்ளதாக நான் பிராதில் சொல்லியுள்ளதால் எப்போது நான் அளந்து தெரிந்து கொண்டேன் என்றால் மொத்த சொத்தில் அரசால் ஆர்ஜிதம் செய்யதது போக மீதமுள்ள விஸ்தீரணத்தை நான் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். 11 செண்ட் நிலம் ஆர்ஜிதம் செய்யபட்டது என்று தேசிய நெடுஞ்சாலை உத்தரவின் அடிப்படையில் தெரிந்து கொண்டேன். அந்த உத்தரவு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்த உத்தரவு எனக்கு கிடைக்கவில்லை. இவை அனைத்தும் நான் ஒரு அனுமானத்தின் பேரில்தான் சொல்லியுள்ளேன் என்றாலும் அவை உண்மைக்கு புறம்பானது என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளின் சொத்துக்கு நான்குமால் எனக்கு தெரியும். பிரதிவாதிகள் சொத்தில் கட்டிடத்தை தாண்டி கிழக்கு பக்கத்தில் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். அந்த காம்பவுண்ட் சுவரை ஒட்டி வடக்குமூலையில் கடை உள்ளது என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலைக்காக அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்த பின்பும் அதில் அவர்கள் கடைகட்டியுள்ளார்கள்.

2. அந்த கடைக்கு மேல்புறம் காலியிடம் உள்ளது என்றால் நான் அதை பார்க்கவில்லை. பிரதிவாதிகளின் கட்டிடம் எனக்கு தெரியும். பிரதிவாதிகளின் கட்டிடத்திற்கும் மேற்சொன்ன வடக்குமூலையில் உள்ள கடைக்கும் எவ்வளவு துாரம் உள்ளது என்றால் நான் அளந்து பார்க்கவில்லை என்பதால் எனக்கு தெரியாது. தோராயமாகவும் எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் கட்டிடம் மேற்சொன்ன கடைக்கு மேல்புறம் உள்ளது என்றால் சரிதான். தாவா பிரச்சனைகுரிய இடம் மேற்சொன்ன கடைக்கு மேல்புறம் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வடக்குமூலையில் உள்ள கடை எந்த கிராம எல்லைக்கு உட்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த கடைக்கு வடக்கே முத்துபாண்டி என்பவருக்கு பாத்தியப்பட்ட கடை உண்டு என்றால் சரிதான். மேற்படி முத்துபாண்டி கடைக்கு மேல்புறம் எனது சொத்து உள்ளது. மேற்படி முத்துபாண்டி கடை  மேலமடை 2 வது பிட் எல்லைக்கு உட்பட்டது. தாவா சொத்து பிரதிவாதிகளின் காம்பவுண்ட் சுவரில் வடக்குமூலையில் உள்ள கடைக்கு பின்புறமாக மேற்கு திசையில் நேராக கிழமேல் உள்ளது என்றால் சரிதான்.

3. மேலமடை 2 வது பிட்  மற்றும் வண்டியூர் 1 வது  பிட் கிராமத்திற்கான புல வரைபடத்தை நான் பார்த்துள்ளேன். புல வரைபடத்தில் வாதி, பிரதிவாதிகள் சொத்திற்கு இடையே எல்லை நேர்கோடாகதான் உள்ளது என்றாலும் எங்கும் வளைந்து காணப்படவில்லை என்றாலும் சரிதான். அதன் அடிப்படையில் பார்த்தாலும் வழக்கிடை சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

நான் எந்த காலகட்டத்தில் எங்களது சொத்தை சுற்றி கற்காள் ஊன்றி கம்பிவேலி அமைத்தேன் என்றால் சொத்து வாங்கியதும் ஊன்றியிருப்பேன் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் சொத்து வாங்குவதற்கு முன்பே பிரதிவாதியின் சொத்தில் கட்டிடத்தில் வடபுறம் சுவர் இருந்தது என்றால் சரிதான். அந்த சுவர்தான் பிரதிவாதிகளின் சொத்தின் எல்கை. மேற்சொன்னவாறு பிரதிவாதியின் கட்டிட வடபுற சுவர் அவர்களது சொத்தின் எல்லையாக இருக்குமேயானால் அந்த சுவர் எழுப்பட்ட பின்பு வடபுறம் உள்ள சொத்தை கிரையம் வாங்கிய நான் எதற்காக கிரைய சொத்தின் தென்புறத்தில் கம்பிவேலி அமைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றால் எனது சொத்தில் எனது விருப்பப்படி நான் கம்பிவேலி அமைத்துள்ளேன்.

4. நான் கம்பிவேலி அமைக்கவில்லை என்றாலும் பிரதிவாதிகள் யாரும் அதை அப்புறபடுத்தவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் என்னிடத்தில் சிமெண்ட், மணல் போட்டு கொள்வதாக சொல்லி அந்த கம்பிவேலியை அப்புறப்படுத்தி மீண்டும் ஊன்றி தருவதாக சொன்னார்கள் நானும் அதற்கு சம்மதித்தேன். எவ்வளவு காலம் அவ்வாறு மணல், செங்கல், சிமெண்ட போட்டுவைத்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதிகளிடம் மீண்டும் கம்பிவேலியை ஊன்றி தருமாறு கேட்டேனா என்றால் கேட்டேன். எப்போது கேட்டேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி சங்கதியை எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். கம்பிவேலி இருந்ததற்கு அடையாளம் ஏதும் இருக்கிறதா என்றால் தற்போது எந்த அடையாளமும் இல்லை. பிரதிவாதிகள் கட்டிடம் கட்டியபோது கம்பிவேலி இருந்தது. பிரதிவாதிகள் நான் எனது சொத்தை கிரையம் வாங்கியபின்பு அவர்கள் சொத்தில் எப்போது கட்டிடம் கட்டினார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை.

5. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 10 புகைபடங்களில் 6 வது புகைபடத்தில் உள்ள கட்டிடத்தில் மேல்கூரையுடன் உள்ளது என்றால் சரிதான். அதை தாண்டி காம்பவுண்ட் சுவர் இல்லை என்றால் சரிதான். அதே புகைபடத்தில் கட்டிட சுவரை தாண்டி கிழமேலாக கற்காள் மட்டும் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் மேற்படி கட்டிடத்தை எழுப்பிய காலத்திலேயே எல்லை குறித்து ஊன்றபட்ட கற்காள் தான் அந்த கற்காள்கள் என்றால் சரியல்ல. அந்த கற்காள் வரை பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. அதே போல் என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டபோது எடுத்த புகைபடத்தில் பிரதிவாதிகள் கட்டிடத்திற்கு வடபுறம் கற்காள்கள் கிழமேலாக இருக்கிறது என்றால் சரிதான். நான் ஊன்றியபின்பு அதை வேறு யாரோ பிடுங்கி ஊன்றியுள்ளார்கள். அந்த புகைப்படம் பி.வா.சா**.** ஆ **1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** பி.வா.சா.ஆ 1 புகைப்படத்தில் கட்டிடத்தை ஒட்டி கற்காள்கள் வரை பிரதிவாதிகள் கட்டிட கழிவுகளை கொட்டியுள்ளார்கள் என்றால் யார் கொட்டியது என்று தெரியாது ஆனால் கட்டிட கழிவுகள் காணப்படுகிறது. மேற்படி கற்காள்களை பற்றி பிராதில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. நீதிமன்ற ஆணையரும் அந்த கற்காள்களை பற்றி எதுவும் தனது அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 புகைப்படத்தில் காணப்படும் பிரதிவாதிகளின் கட்டிடத்தில் வடபுறம் நிறைய

ஜன்னல்கள் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வாதப்படி மேற்படி கட்டிடத்தின் வடபுறம் சுவரை ஒட்டி எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் அந்த ஜன்னல்களை குறித்து பரிகாரம் எதுவும் கேட்டு கொண்டுள்ளேனா என்றால் இல்லை.

**(**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது**)**